தினமலர்
www.dinamalar.com
சென்னை
• புதன் • ஜூலை 4 2018

# தேசிய பால் பேட்மின்டன் சென்னை ஐ.சி.எப்., சாம்பியன்

**சென்னை, ஜூலை 4–**

செம்மஞ்சேரியில் நடந்த, தேசிய பால் பேட்மின்டன் போட்டியில், சென்னை ஐ.சி. எப்., அணி, சாம்பியன் பட்டத்தை வென்றது.

செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி விளையாட்டு துறை சார்பில், 10வது தேசிய பால் பேட்மின்டன் சாம்பியன் போட்டி, கல்லூரி வளாகத்தில், ஜூன், 30ல் துவங்கி, நேற்று முன்தினம் மாலை முடிவடைந்தது.

இதில், இந்திய அளவில் எட்டு ரயில்வே அணிகள் உட்பட, செயின்ட் ஜோசப் கல்லூரி, ஐ.ஓ.பி., கனரா வங்கி உள்ளிட்ட, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த, 20 ஆடவர் அணிகள் பங்கேற்றன. நான்கு




■ தேசிய அளவிலான பால் பேட்மின்டன் போட்டியில், சாம்பியன் பட்டம் வென்ற சென்னை, ஐ.சி.எப்., அணி. இடம்: செம்மஞ்சேரி.

பிரிவுகளாக பிரித்து, 'லீக்' மற்றும், 'சூப்பர் லீக்' முறையில், போட்டிகள் நடந்தன.

'லீக்' போட்டிகளின் முடிவில், நான்கு அணிகள், 'சூப்பர் லீக்' போட்டிக்கு தகுதி பெற்றன. நேற்று முன்தினம் துவங்கிய, 'சூப்பர் லீக்' போட்டி முடிவில், சென்னை, ஐ.சி.எப்., முதலிடத்தை பிடித்து, 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசை தட்டிச் சென்றது.

இரண்டாவது இடத்தை தெற்கு ரயில்வேயும், மும்பை ரயில்வே மற்றும் செயின்ட் ஜோசப் அணிகள், மூன்று மற்றும் நான்காம் இடங்களை பிடித்தன.

all- 040718